


# சிறுவீத மீன்பிடியின் பங்களிப்பு

உணவுப் பாதுகாப்புக்கும், வறுமை ஒழிப்புக்கும் நிலைத்தத் தன்மைக்கும்



# சிறுவீத மீனவர்கள், மீன்தொழிலாளர்கள் என்பவர்கள் யாவர்?

உலகம் முழுவதும் பார்த்தால், மீன்பிடி, மீனைப் பதனப்படுத்துதல், விற்பனை செய்தல், சந்தைப்படுத்துதல் ஆகிவற்றில் ஈடுபட்டுள்ளவர்களில் 90 சதவிகித்தினர் சிறுவீத மீன்பிடித்துறையைச் சேர்ந்தவர்கள். இவர்களில் ஏறக்குறைய பாதி பேர் பெண்கள். உலகளவில் நடக்கும் மீன்பிடியில் ஏறக்குறைய பாதி சிறுவீத மீன்பிடித்துறையின் பங்களிப்பாகும். நேரடியாக மீன் நுகர்வோரின் தேவையைப் பூர்த்தி செய்வது என்று பார்த்தால், இந்த உபதுறை மூன்றில் இரண்டு பங்கை அளிக்கிறது. கடல், ஏரி, ஆறு ஆகியவற்றின் கரைகளில் வாழும் சமூகத்தைத் தாங்கிப்பிடிப்பதாக சிறுவீத மீன்பிடி உள்ளது. இந்த துறையிலிருந்து பொருட்கள் அனுப்பப்படுவதாலும், இந்தத் துறைக்கான பொருட்களை அளிப்பதாலும், இதரத் துறைகளிலும் வேலை வாய்ப்பையும் வருமானத்தை அளிக்கும் இயந்திரமாக சிறுவீத மீன்பிடி செயல்படுகிறது. பல சமயங்களில் மீன்பிடி பருவகாலங்களைச் சார்ந்து நடப்பதாகவும், பகுதி நேரத் தொழிலாகவும் இருக்கிறது. அதன் காரணமாக சமூகங்களுக்கு கூடுதல் வருமானம், உணவு அளிப்பதாக உள்ளது.

பொதுவாக மீன்பிடி என்பதே ஆண்களின் தொழில் என்ற பார்வை உள்ளது. இருந்தபோதும் பெண்கள் மிக முக்கியமான ஆனால், கண்ணுக்குத் தெரியாத பங்களிப்பை செய்துவருகின்றனர். மீன்பிடிப்புக்குப் பிந்தைய பிரிவு என்று பொதுவாகச் சொல்லப்படும், வாங்குதல் - விற்றல், பதனப்படுத்துதல், அது தொடர்பான சந்தை நடவடிக்கைகள் என்று 'துணை தொழில்களில்' உழைப்பவர்களில் பெண்களின் பங்கு 90 சதவிகிதமாக இருக்கிறது. உலகின் பல பகுதிகளில் சிப்பி, கடல்பாசி போன்றவற்றைச் சேகரிக்கும் / அறுவடை செய்யும் பணிகளில் பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

குறைவான அளவுக்கு மீன்பிடியில், குறிப்பாக உள்நாட்டிலும் கடற்கரையை ஒட்டியும் மீன்பிடியில் ஈடுபடுகிறார்கள். அதேசமயம், ஆண்கள் மீன்பிடிக்காகச் சென்றுவிடுவதால், மீனவக் குடும்பத்தைச் தக்கவைக்கவும் பெண்கள் பொறுப்பாகிறார்கள். மேலும் அவர்கள் சமூகத்தின் சமூக பண்பாட்டு கூறுகளைத் தக்கவைப்பது நிர்வாகிப்பது பெண்களின் பொறுப்பாகிவிடுகிறது. இருந்தபோதும் பெண்களின் பணி மிக மோசமான அளவில் நினைவில் கொள்ளப்படுகிறது, அல்லது கருத்தில் கொள்ளப்படுவதே இல்லை.





மொத்த உழைப்பாளர்களில் உள்ள **90% பெண்கள்** மீன்பிடிக்கு முன்தைய பணிகளில் இருபெகின்றனர்.



உலக அளவில் உள்ள பல **லட்சக்கணக்கானோருக்கு** **சிறுவீத மீன்பிடிதான்** அவர்களின் **சமூக பண்பாட்டுத்** தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் வழியாக இருக்கிறது

# நிலைத் தன்மையை எட்டுவதற்கான பன்முகத் தன்மையும் பொதுவான குணாம்சங்களும்

*வெவ்வேறு பிராந்தியங்களில் வெவ்வேறுவிதமான செயல்பாடுகளைக் கொண்டதாக சிறுவீத மீன்பிடி இருக்கிறது. பொதுவான குணாம்சங்களை அடிப்படையாகக் கொண்ட பொதுவான வரையறையை மட்டுமே எட்ட முடிகிறது. பொதுவான குணாம்சங்களில் பின்வருனவை அடங்கும்*

- பரவலாகப் பார்த்தால், பெண்கள் மிகக் குறிப்பிடத்தக்க பாத்திரத்தை ஆற்றும் குடும்பத் தொழிலாக இருக்கிறது.

- நேரடி மனித நுகர்வுக்காக மீன் பிடிக்கப்படுகிறது. மிருகத் தீவனத்திற்காக, எண்ணெய் எடுப்பதற்காக, உரம் மற்றும் இன்ன பிற உணவு சாராத் தேவைகளுக்காக மீன்பிடி, பொதுவாக, சிறுவீத மீன்பிடியின் கூறாகக் கொள்ளப்படுவதில்லை.

- ஒப்பீட்டு ரீதியில் சிறிய படகுகளும், சிறு எண்ணிக்கையிலான மீன்பிடி சாதனங்களும் கொண்டு ‘தீங்கு’ விளைவிக்காத நுட்பங்களைப் பயன்படுத்தி, வலையை எடுப்பதற்கு யந்திரங்களைப் பயன்படுத்தாமல், மிகக் குறைவான மூலதனத்தைக் கொண்டு, மிகக் குறைவான சக்தியாதரங்களைச் செலவழித்து, குறைவான சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தி இந்த வகை மீன்பிடி நடத்தப்படுகிறது.

- பருவகால அடிப்படையில் பார்த்தாலும் பூகோள ரீதியில் பார்த்தாலும் மீன்பிடி செயல்பாடுகள் பண்முகத்தன்மை வாய்ந்தவை. தொழில்நுட்பத்தைக் காட்டிலும் திறனைச் சார்ந்தவையாக இருக்கும். உள்ளூர் உயிர்ச்சூழலையும், பருவநிலைமையையும் பற்றிய விரிவான அறிவை அடிப்படையாகக் கொண்ட, சிறு வயது முதலே கற்றுக்கொள்ள வேண்டிய, தலைமுறை தலைமுறையாக வரும் அறிவையும் திறனையும் நம்பியே சிறுவீத மீன்பிடி இயங்குகிறது.

- மீன்பிடி நடவடிக்கைகள் ஒப்பீட்டு ரீதியில் பார்த்தால் கரைக்கு அருகிலேயே நடக்கின்றன. மீன்பிடி நேரமும் மிகக் குறைவாகவே உள்ளது (பெரும்பாலும் 24 மணி நேரத்துக்குக் குறைவாகவே நடைபெறுகிறது.) இருந்தபோதும், சர்வதேச கடலுக்குள் அல்லது அடுத்த நாட்டின் கடலுக்குள் நுழைந்து மீன்பிடிக்கும்போது அது சில நாட்கள் நீடிப்பதாக உள்ள குறிப்பான விதிவிலக்குகளும் உள்ளன.

- கூலி நிர்ணயம் செய்யப்பட்ட தொகையாக இல்லாமல் பிடிபட்ட மீனில் ஒப்புக்கொள்ளப்பட்ட பங்கை அளிப்பதாக உள்ளது. மீன்பிடிக்கு முன்பும் பின்பும் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும் இந்த ‘பங்கு’ முறை கூலி வழங்குவது நீள்கிறது. மேலும், இது வயதானவர்கள், ஊனமுற்றவர்கள், விதவைகள், அனாதைகளுக்கான வழக்கத்தின் அடிப்படையிலான சமூக பாதுகாப்பு கட்டமைப்பாகவும் செயல்படுகிறது.

- மீன்பிடி களங்களை அணுகுவது மரபான பழக்க வழக்க விதிகளால் கட்டுப்படுத்தப்படுகிறது. யார், எங்கே, எப்போது, எந்த வகையான சாதனங்களைக் கொண்டு மீன்பிடிப்பது என்பதை அந்த விதிகள் தீர்மானிக்கின்றன.

- பிடிபட்ட மீன் உள்ளூரிலேயே விற்கப்படுகிறது, பதனப்படுத்தப்படுகிறது. பரவலாக வாழ்கின்ற, அனேகமாக கிராமப்புர மக்களுக்கு உணவாகிறது. இதன் காரணமாக உள்ளூர் மக்களின் உணவுப் பாதுகாப்பிற்கு முக்கியமான பங்களிப்பு செய்கிறது. இருந்தபோதும் தற்போது பிடிக்கப்படும் மீன்கள் தொலைவில் உள்ள ஏற்றுமதி சந்தைகளுக்கும் அனுப்பப்படுகின்றன. சிறுவீத மீன்பிடியில் கிடைத்த மீன்களின் புத்தம் புதுத் தன்மையாலும், தரத்தாலும் அங்கே நுகர்வோர்கள் கவரப்படுகிறார்கள்.

- மீன்பிடிக்கு முந்தைய மற்றும் பிந்தைய, குறிப்பாக, சந்தைப்படுத்துதலிலும், பதனப்படுத்துதலிலும் பெண்கள் பிரிக்க முடியாத அங்கமாக உள்ளனர்.

- மீன்பிடிக்கும் வீட்டுத் தேவைகளுக்கும் கடன் அளிக்கின்ற, மீனை வாங்கிக்கொள்கின்ற இடைத்தரகர்கள் மீது கணிசமான நிதி சார்பு இருக்கிறது. தரகர்கள் இந்த சார்பைப் பயன்படுத்திக்கொண்டு மீனவர்களைச் சுரண்டுகிறார்கள். பிடிபட்ட மீனைத் தங்களுக்கு மட்டுமே விற்க வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்து குறைவான விலையை வழங்குகின்றனர். யந்திரமயமாதல், பெரிய படகுகள்-சாதனங்கள் வாங்குதல் போன்ற நவீனப்படுத்தும் நடவடிக்கைகளுக்குத் தேவையான மூலதனத்தின் காரணமாக இந்த சார்புத் தன்மை மேலும் அதிகரித்துள்ளது.

- மீன்பிடித்தல், பதனப்படுத்துதல், சந்தைப்படுத்துதல் என்ற மீன்துறை நடவடிக்கைகள் பருவகால ரீதியானதாகவும், பகுதி நேரத் தொழிலாகவும், விவசாயம், வணிகம், மற்றும் பிற பணிகளுடன் சேர்த்து செய்யப்படுவதாகவும் இருக்கிறது.

- சமூகத்தின் பிற பகுதிகளுடன் ஒப்பிடும்போது மீனவ சமூகம், சமூக ரீதியாக தனிமைப்பட்டதாகவும், பொருளாதார ரீதியில் பாதகநிலையில் உள்ளதாகவும், மிக அதிக அளவு மீன் வளத்தையும் மீன்பிடி தொடர்பான நடவடிக்கைகளையும் சார்ந்துள்ளதாகவும் இருக்கிறது.

- மிக மோசமான உள்கட்டமைப்பு வசதிகள் கொண்ட, தனிமைப்பட்ட, தொலைதூர பகுதிகளில் வசிக்கின்ற மீனவ சமூகம் மிகக் கடுமையான வறுமையால் பாதிக்கப்பட்டதாக உள்ளது.



# சிறுவீத மீன்பிடி ஏன் முக்கியமானது?

வறுமை ஒழிப்பு, உணவுப் பாதுகாப்பு என்ற ஒன்றுடன் பிணைக்கப்பட்ட இரண்டு இலக்குகளை எட்டுவதற்கு சிறு வீத மீன்பிடி முக்கியமான பங்காற்றுகிறது. பெருவீத மீன்பிடி, கூடுதல் தீவிரமான அரை தொழிலக மீன்பிடி மற்றும் தொழிலக மீன்பிடிகளை (Semi-industrial and industrial fisheries) விட சிறுவீத மீன்பிடி முக்கியமானதாகும். அதற்கான காரணங்கள் பின்வருமாறு :



## உணவுப் பாதுகாப்பு

ஆரோக்கியத்திற்குத் தேவையான புரதம் மற்றும் இதர சத்துப்பொருட்களுக்கு வேறு மாற்று இல்லா ஒன்றாக மீன் இருக்கிறது. 300 கோடி மக்களுக்கு (உலக மக்கள் தொகையில் 43 சதவிகித மக்களுக்கு) கிடைக்கும் விலங்குப் புரதத்தில் 20 சதவிகிதத்தை மீன் உணவு அளிக்கிறது. வழக்கமான உணவில் கிடைக்காத விட்டமின்கள், தாதுப்பொருட்கள், பன்முக நிறைவுபெற்ற ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள் (Polyunsaturated omega-3 fatty acids) மீனில் கிடைக்கின்றன. தொலைதூரமான, தனிமையில் உள்ள மீனவக் கிராமங்களுக்கு ஜீவாதாரமான, மலிவான உணவை வழங்குவதாக சிறுவீத மீன்பிடி உள்ளது. சிறார்கள், பால் ஊட்டும் தாய்மார்களின் சத்துணவு நிலையை மேம்படுத்த மீன் உணவு மிகவும் உதவியாக இருக்கும்.

## உள்ளூர் பொருளாதார வளர்ச்சிக்கான பங்களிப்பு

மிகக் குறைவான மாற்று வேலைவாய்ப்புகள் கிடைக்கும் பகுதிகளுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை சிறுவீத மீன்பிடி வழங்குகிறது. மீன்பிடிக்குப் பிந்தைய பதனப்படுத்துதல், வணிகம், போக்குவரத்து, சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட வேலை வாய்ப்புக்களை மீன்பிடிக்குப் பின்பும், வலை உற்பத்தி, வலைகளைச் சரிசெய்தல், கலங்கள் கட்டுதல், மின்னனு வேலைகள், சாதனங்களை வழங்குதல் இன்னும் இதர வேலைவாய்ப்புகளை மீன்பிடிக்கு முன்பும் சிறுவீத மீன்பிடி வழங்குகிறது. ஒவ்வொரு மீன்பிடி வேலைக்கு 4 முதல் 6 வேலைகள் கடற்கரையில் உருவாக்கப்படுகின்றன. தொழிலக மீன்பிடியைக் காட்டிலும் கூடுதலாக சமத்துவம் உள்ள வகையில், பல பகுதிகளுக்கும் பரவும் வகையில் சிறுவீத மீன்பிடியில் மீன் வளத்தின் பலன்கள் பிரித்தளிக்கப்படுகின்றன. மற்ற செயல்பாடுகள் கிடைக்காதபோது, சமூகப் பாதுகாப்பு வலையை சிறுவீத மீன்பிடி வழங்குகிறது. பஞ்சத்தாலும், வறட்சியாலும், யுத்தத்தாலும், மனிதர்களால் அல்லது இயற்கையால் ஏற்படும் பேரழிவுகளின்போதும் மேற்சொன்னது மிக முக்கிய பங்காற்றுகிறது.

## அன்னிய செலவானி சாம்பாத்தியம்

சர்வதேச வணிகத்தின் மூலம் கிடைக்கும் அன்னிய செலவாணியைக் கொண்டுவருதன் மூலம், தேசியப் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமான பங்களிப்பை சிறுவீத மீன்பிடி வழங்குகிறது.

வளர்ந்த நாடுகளில் உள்ள நுகர்வோர்கள் சுற்றுச்சூழல் நேய முறையில் பிடிக்கப்பட்ட மீன்களை விரும்புவதால் சிறுவீத மீன்பிடித்துறைக்கு சந்தையில் நல்ல அனுகூலத்தை வழங்குகிறது. இருந்தபோதும் உணவுப் பொருளின் தரம், எங்கிருந்து, எந்த வழியில் பெறப்பட்டது என்ற விவரங்களை அளிக்க வேண்டும் என்ற விதி சிறுவீத மீன்பிடித்துறைக்குப் பாதகமாக விளங்குகிறது. மேலும், வெளிநாட்டுச் சந்தைக்கு ஏற்றுமதி செய்வது, உள்ளூர் உணவுப் பாதுகாப்புத் தேவைகளை நிறைவு செய்வது என்ற முரண்பாட்டுக்குத் தீர்வு காணவேண்டியுள்ளது.



## அறிவுத் தளம்

உள்ளூர் உயிர்ச்சூழல், மீன்களின் நடத்தை முறை, வானிலை மற்றும் கடலியல் தன்மைகள், பெருங்கடல் சூழல் ஆகியவற்றைப் பற்றி தலைமுறை தலைமுறையாகப் சேகரிக்கப்பட்ட போதுமான அறிவுத் தளத்தை சிறுவீத மீன்பிடி துறை கொண்டுள்ளது. இந்த பாரம்பரிய நிகழ்வுகளில் சடங்குகள் போல குறிக்கப்பட்டுள்ளன. இந்த விவரங்கள், பழமொழிகள், வழக்கு மொழிகள், பாடல்கள், சமூக பாரம்பரிய நிகழ்வுகளில் சடங்குகள் போல குறிக்கப்பட்டுள்ளன. படகுகள், வலைகளை வடிவமைப்பதில் நிகழும் தொழில்நுட்ப மேம்பாடுகளில் இந்த பாரம்பரிய அறிவு பிரதிபலிக்கிறது. இவை, குறிப்பாக, புயல் - கடல் அலை எழுச்சி - சுனாமி போன்ற இயற்கை பேரிடர்களின் போது, விபத்துகளைக் குறைப்பது, மரணங்களைத் தவிர்ப்பது போன்றவற்றில் மிக முக்கியமான பங்காற்றியுள்ளது.

## கலாச்சார முக்கியத்துவம்

சாகசத்தையும் சுதந்திரத்தையும் அடையாளமாகக் கொண்ட வாழ்க்கை முறையாக மீன்பிடியும் கடல் பயணமும் இருக்கின்றன. அது இலக்கியம், இசை, நாடகம், விளையாட்டு, சமையல் கலை ஆகியவற்றைக் கொண்ட ஒரு கலாச்சார பாரம்பரியமாகும். இந்த கலாச்சாரம் சிறுவீத மீன்பிடியால் பாதுகாக்கப்பட்டு மறுவுருவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. அது மீனவ சமூகத்தின் அடையாளமாகவும் இச்சமூகங்களின் ஒத்திசைவுக்கு அடித்தளமாகவும் இருந்து வருகிறது. மீன்பிடி உயிர்ச்சூழல்களை மதிப்பதற்கும் பல்லுயிர்ச்சூழலை பேணுவதை மேம்படுத்துவதற்கும் மீனவ கலாச்சாரமும் அதன் அடிப்படையிலான நிறுவனங்களும் மிக முக்கியமான பாத்திரத்தை ஆற்றிவருகின்றன.

பல மண்ணின் மைந்தர்களான சமூகங்கள் மற்றும் உள்ளூர் மீனவச் சமூகங்களுக்கு நிலமும் கடலும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய, பிரிக்கப்பட முடியாத அமைப்புகள் ஆகும். இந்தப் புரிதலின் அடிப்படையில் மீன்வளத்துறைக்கு உயிர்ச்சூழல் அணுகுமுறையை மேற்கொள்ள முடியும். இச்சமூகங்கள் அவர்களின் பாரம்பரிய அறிவு முறையையும், மரபான சட்ட முறையையும் தங்களின் கலாச்சார அடையாளத்தையும் பாதுகாத்துக்கொள்ள அவர்களின் நிலம் அவர்களின் நீர் பிரிக்கப்படாதவகையில் ஒருங்கிணைந்திருப்பதும் அவற்றை அவர்கள் பாதுகாப்பான முறையில் அணுகமுடிவதும் அவசியமானதாகும்.





# சிறுவீத மீன் பிடித்துறை எதிர்கொள்ளும் **சவால்கள்** யாவை?


சிறுவீத மீன்பிடித்துறையில் உள்ளவர்களின் வாழ்க்கையும் பணி நிலைமையும் இடர் நிறைந்ததாகவும், திருப்திகரம் என்று சொல்வதற்கு வெகு தொலைவிலும் உள்ளன. அதற்கான காரணங்களில் பின்வருவனவும் அடங்கும் :


- சிறுவீத மீன்பிடித் தொழிலாளர்கள் சமூக பொருளாதார ஏணியின் கீழ் படிகளில் கிடக்கின்றனர். அதன் காரணமாக அவர்கள் சுரண்டலுக்கு ஆளாகும் நிலையில் வாழ்கிறார்கள்;
- உழைப்புக்கான ஊதியம் இன்மை, சந்தையை அணுகுவதற்கான வாய்ப்பு குறைவு, பிடிப்பட்ட மீனைக் கைப்பற்றிக்கொண்டு விலையைக் குறைக்கும் வட்டிக்காரர்களின் சுரண்டல் ஆகியவை மீனவர்களை கடன் வலையில் சிக்கியவர்கள் ஆக்கியுள்ளன;
- கல்வி, சுகாதாரம், சமூக பாதுகாப்பு ஆகிய அடிப்படைச் சேவைகள் கிடைக்காமை;
- பலவீனமான அமைப்பு அடித்தளம் (உதாரணம்: சிறப்பாகச் செயல்படும் கூட்டுறவுகள், சங்கங்கள், தொழிற்சங்கங்கள் இன்மை);
- வீடுகள் அமைந்த நிலங்கள், மீன்பிடிக்கும் பிற தேவைகளுக்கும் சமூகத்தால் பாரம்பரியமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த நிலங்கள் மீதான உரிமை பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது;
- தொழிற்சாலை கலங்கள், மற்றும் பிற தொழில் வளர்ச்சியின் காரணமாக (நில விற்பனைத் தொழில், நீருயிர் வளர்ப்புப் பண்ணைகள், மின் சக்தி உற்பத்தி, பெட்ரோல் உற்பத்தி, சுரங்கம் போன்ற தொழில்கள்) உள்நாட்டு நீர்நிலைகள், கடல்-கடல்சார் பகுதிகளின் உரிமை பாதுகாப்பற்றது ஆனது, அல்லது உரிமை இழப்பு ஆகியவற்றின் காரணமாக மீன்பிடிக்கும் இடங்களில் இருந்து மீனவர்கள் அகற்றப்படுவது. (மீன்பிடியை) அணுகுவதற்கான உரிமையைத் தனியார் மயப்படுத்துவது, மீன்பிடி உரிமையை வியாபாரம் செய்வதற்கான சந்தைகளை ஏற்படுத்துவது மேற்சொன்னது போன்ற விளைவுகளையே ஏற்படுத்துகின்றன. இவ்வாறு ‘வன ஆதாரங்களைப் பறிப்பது’ சிறு விவசாயிகள் எதிர்கொள்ளும் நிலப்பறிப்புக்கு இணையானதாகும்;
- கடல் பூங்காக்களை அமைப்பது, பாதுகாக்கப்பட்ட பகுதிகளை அமைப்பது போன்ற மேலிருந்து கீழ் நோக்கி வரும் பேணுதல் நடவடிக்கைகள் சிறுவீத மீன்பிடியாளர்களை விலக்கி வைப்பனவாக உள்ளன;
- இயற்கையான வாழிடங்கள் மாசுபட்டுப்போவது, சீரழிந்துபோவது, அத்துடன் இயற்கை பேரிடர்களாலும் பருவநிலை மாற்றத்தினாலும் பாதிப்புக்கு ஆளாக வாய்ப்புள்ள நிலை;

# சிறுவீத மீன்பிடித்துறை **நிலைத்த தன்மை** உள்ளவையாக உள்ளதா?

சுற்றுச்சூழல் மீது குறைவான அழிவுகரத் தாக்குதல், குறைவான சக்தியைப் பயன்படுத்துவது, தேவையில்லாத உயிர்கள் வலையில் சிக்குவது குறைவாக இருப்பது, வலையைத் தேர்ந்தெடுப்பது ஆகியவை உள்ளிட்ட காரணங்களினால், ஒரு பொதுவான விதியாக தொழில்துறை மீன்பிடியைக்காட்டிலும் சிறுவீத மீன்பிடி கூடுதல் நிலைத்தன்மை உள்ளதாக இருக்கிறது. இருந்தபோதும் சிறுவீத மீன்பிடித் துறையின் பிற அம்சங்கள் கவலைக்குரியவையாக இருக்கின்றன. அவற்றின் பின்வருவனவும் அடங்கும் :

- விஷம் வைத்தல், வெடிகளைப் பயன்படுத்துதல், சிறிய கண்ணிகளைக் கொண்ட வலைகளைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட அழிவுகரமான மீன்பிடி முறைகள்.



- அதிக சக்தி தேவைப்படும், அதிகத் திறன் வாய்ந்த வலைகளையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தும் (உதாரணமாக சிறு டிராவலர்கள் வளை-வலைகள் (ring seines) தொழில்துறை மீன்பிடிக்கும் சிறுவீத மீன்பிடிக்கும் இடையிலான எல்லையை மங்கவைக்கும் போக்கு அதிகரித்துவருவது.

இதுபோன்ற உள் சவால்கள் உள்ள இடங்களில் அவற்றிற்குத் தீர்வு காண்பது எவ்வாறு என்பதை இந்தத் துறை தீர்வு கண்டாக வேண்டும். இதனைப் புறக்கணித்தால், சிறுவீத மீன்பிடியின் உள்ளீடாக உள்ள வலுவை இழந்துபோவதாக ஆகிவிடும். அதாவது, உணவு பாதுகாப்பு, வறுமை ஒழிப்பு, நிலைத்தன்மை ஆகியவற்றைச் சாதிப்பதற்கான தன் திறனை சிறுவீத மீன்பிடித்துறை இழப்பதாக ஆகிவிடும். சிறுவீத மீன்பிடித்துறை எதிர்கொண்டுவரும் உள் சவால்களையும் வெளி சவால்களையும் திறன்மிகு வகையில் எதிர்கொண்டால், பல்வகைப்பட்ட நோக்கங்களையும் சாதிக்கக் கூடியதாக, நிலைத்த தன்மை கொண்டதாக மீன்பிடியை வளர்த்தெடுப்பதற்கான முன்மாதிரியாக சிறுவீத மீன்பிடித்துறையாக எழுந்து நிற்கும்.



இந்த சூழலில் FAO தலைமையில் நடைபெறுகின்ற சிறுவீத மீன்பிடியைப் பாதுகாப்பதற்கான சர்வதேச வழிகாட்டு நெறிமுறைகளை (SSF Guidelines) உருவாக்கம் நிகழ்வுப் போக்கு பொருத்தமுள்ளதாகிறது. இத்துறை எதிர்கொள்ளும் சவால்களுக்கு மனித உரிமை அணுகுமுறையின் வழி தீர்வு காணவும், ஏற்கனவே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிற அத்துறையின் பாத்திரத்தை மேம்படுத்தவும், பட்டினியையும், வறுமையையும் ஒழிப்பதற்கு அத்துறை அளிக்கும் பங்களிப்பை மேலும் அதிகரிக்க எடுக்கப்படும் தேசிய-சர்வதேசிய முயற்சிகளுக்கு வலுவூட்டவும் மேற்படி வழிகாட்டு நெறிமுறை முயற்சி மேற்கொள்கிறது. பொதுவாகப் பார்த்தால் சிறுவீத மீன்பிடியின் எதிர்காலத்தைப் பாதுகாக்கவும் குறிப்பாகப் பார்த்தால் நிலைத்த தன்மையுள்ள மீன்பிடியின் எதிர்காலத்தைப் பாதுகாக்கவும் வழிகாட்டு நெறிமுறைகளை ஏற்றுக்கொள்வதும் அதனை நடைமுறைபடுத்துவது உதவியாக அமையும்.



